**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 22** **நாள் 29.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் பெண்கள் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் பெற 31.01.2019 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, பணிக்கு செல்லும் பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதற்கு ஏதுவாக மானிய விலையில் இருசக்கர வாகனங்களை பெற அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் 7225 பெண்கள் 2017–18 நிதியாண்டில் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் பெண்கள் 2018–19 நிதியாண்டிற்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின்கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களை 10.01.2019 முதல் 21.01.2019 வரை சமர்ப்பிக்கலாம் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது, இத்திட்டத்தின்கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களை 31.01.2019 அன்று மாலை 5.00 மணி வரை நேரிலோ, பதிவு அல்லது விரைவு தபால் மூலமாகவோ சம்மந்தப்பட்ட அருகில் உள்ள மண்டல அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பணிக்கு செல்லும் மகளிர் இருசக்கர வாகனத்திற்கு மானியம் பெற்று பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**